# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213056

1. District மாவட்டம் : திருச்சி மாவட்டம் PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 18/2023 Date நாள்: 27.12.23

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 26.12.2023 Date to நாள் வரை : 18.15 Hrs

   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.12.2023 Time நேரம் : 11.00 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் முசிறி வட்டாட்சியர் அலுவலகம் சுமார் 45 km வட மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி –

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் – District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. கண்ணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராஜகோபால்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1984 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

   (f) Occupation : தொழில் வியாபாரம் (g) Address : முகவரி No. 7 1/3, M.P.N. தெரு, துறையூர் பைபாஸ் ரோடு, முசிறி, திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு தங்கவேல், மண்டல துணை வட்டாட்சியர், முசிறி தாலுக்கா அலுவலகம் திருச்சி மாவட்டம்.
   2) திரு. ராஜசேகர், கிராம நிர்வாக அலுவலர், முசிறி மேற்கு, முசிறி தாலுக்கா திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – தாமதமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/12/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 27/12/23
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. Xavier Rani
Rank: நிலை Inspr. of Police, VAC, Try.

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.18/2023-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 27.12.2023 பணியில் இருந்தபோது காலை 11.00 மணியளவில் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், துறையூர் பைபாஸ் ரோடு எண்.71/3, **M.P.N** தெருவில் வசித்து வரும் ராஜகோபால் மகன் கண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், முசிறி தாலுக்கா அலுவலகம், மண்டல துணை வட்டாட்சியர் திரு.தங்கவேல், முசிறி தாலுகா, முசிறி கிழக்கு, கிராம நிர்வாக அலுவலர் திரு.விஜயசேகர் மற்றும் புகார்தாரர் திரு.கண்ணன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 27.12.2023 நண்பகல் 12.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.18/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் **R.**கண்ணன், த/பெ ராஜகோபால், எண்.71/3, **M.P.N** தெரு, துறையூர் பைபாஸ் ரோடு, முசிறி தாலுகா, திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. ஐயா, நான், மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். **Diploma** வரையில் படித்துள்ளேன். முசிறி புது பஸ் ஸ்டாண்டு எதிரில் **EC Cell Care** என்ற பெயரில் மொபைல் கடையினை 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். எனக்கு ஒரு அண்ணன் மற்றும் ஒரு தங்கை உள்ளனர். தொட்டியத்தை சேர்ந்த திரு.முகமது கனி என்பவருக்கு சொந்தமான வார்டு எண்.10, துறையூர் ரோடு என்ற முகவரியில் உள்ள சர்வே எண்.7/16 என்ற எண்ணிற்குட்பட்ட 2180 சதுர அடி கொண்ட காலி மனையினை 09.09.1996 ஆம் தேதி எனது தாயார் திருமதி.கலாராணி பெயரில் கிரையம் பெற்று 2005 ஆம் ஆண்டு மெத்தை வீடு கட்டினார்கள். மேலும், திரு.வடிவேல் என்பவரிடம் இருந்து துறையூர் ரோடு, முசிறி என்ற முகவரியில் உள்ள மனை வார்டு எண்.6, முகவரியில் உள்ள சர்வே எண்.102/1, 102/2 என்ற எண்ணிற்குட்பட்ட 3217 சதுர அடி கொண்ட காலி மனையினை 18.09.1996 ஆம் தேதி எனது தாயார் திருமதி.கலாராணி பெயரில் கிரையம் பெறப்பட்டது. மேற்படி இரண்டு மனைகளுக்கும் இதுநாள் வரையில் எனது தாயார் பெயரில் பட்டா பெறாமல் இருந்ததால் எனது குடும்பத்தினர் என்னை மேற்படி இரண்டு மனைகளுக்கும் பட்டா பெறுமாறு கூறினார்கள். அதன்படி, நான், எனது தாயார் திருமதி.கலாராணி அவர்கள் பெயரில் இரண்டு மனைகளுக்கும் தனி பட்டா கேட்டு முசிறி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள மனு பெட்டியில் 28.02.2023 அன்று விண்ணப்பத்தினை சேர்த்தேன். நான் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் நான், பலமுறை முசிறி கிழக்கு பகுதி **V.A.O** அலுவலகத்தில் சென்று **V.A.O** திரு.விஜயசேகரை சந்தித்து விபரம் கேட்டேன். அவர், ஏதேதோ காரணம் சொல்லி காலம் கடத்தி வந்தார். பின் கடந்த நவம்பர் மாத தொடக்கத்தில் **V.A.O**

திரு.விஜயசேகரை சென்று மீண்டும் பார்த்தேன். அப்போது அவர் 25 வருஷத்துக்கு மேல ஆச்சு, அந்த இடத்துக்கு பட்டா கொடுக்கறது சம்மந்தமாக நிறையா புரொசிஜர் இருக்கு அதனால நேரில் வந்து **D.T** சாரை பாருங்கள் என்று சொன்னார். பின்னர், அதே மாதத்தில் ஒரு நாள் **V.A.O** திரு.விஜயசேகர் மற்றும் **Zonal D.T** திரு.தங்கவேல் ஆகிய இருவரும் வந்து எங்களுடைய இடத்தினை பார்த்துவிட்டு, **Zonal D.T** தங்கவேல் சார் என்னிடம் அப்புறமா தாலுகா ஆபிஸ் வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். அதன்படி நான், நேற்று 26.12.2023 தேதி மாலை சுமார் 6.15 மணிக்கு முசிறி தாலுகா ஆபிஸ் சென்று **Zonal D.T** திரு.தங்கவேல் அவர்களை அவரது இருக்கையில் சந்தித்து பட்டா தொடர்பாக கேட்டு கொண்டிருந்த போது எங்கள் பகுதிக்குரிய **V.A.O** திரு.விஜயசேகரும் அப்போது அங்கு வந்தார். அப்போது **Zonal D.T** திரு.தங்கவேல் என்னிடம் 1996 ஆம் வருஷம் வாங்கியிருக்கிங்க கிட்டத்தட்ட 25 வருஷத்துக்கு மேல உள்ள இடத்துக்கு பட்டா கொடுக்கறது சம்மந்தமாக புரொசிஜர் இருக்கு அதனால நீங்க, ஒரு பட்டாவுக்கு 15 ஆயிரம் வீதம் இரண்டு பட்டாவுக்கும் 30 ஆயிரம் எங்க இரண்டு பேருக்கும் சேர்த்து கொடுத்துடுங்க, உங்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செஞ்சி கொடுத்திடுறோம், இல்லாட்டி உங்களுக்கு இப்போதைக்கு பட்டா கிடைக்காது என்று கூறினார். நான் அவரிடம் சார் நானே செல் கடை வச்சி நடத்தி வர்றேன், அதில் வருமானம் எதுவும் பெருசா இல்ல சார், பணம் இல்லாம செஞ்சு கொடுங்க சார் என்றும், என்னுடைய தாயார் பெயரில் உள்ள இடத்துக்கு எந்த வில்லங்கமும் இல்லியே சார், எல்லா பேப்பரும் நான் கரெக்டா கொடுத்துட்டேனே சார் என்று கூறினேன். அதற்கு அவர் அதெல்லாம் இருக்கட்டும் இடம் வாங்கி 25 வருஷம் கழிச்சி பட்டா கேக்கிறிங்க, சரி கஷ்டப்படுறேன் என்று சொல்றதால 5 ஆயிரம் குறைச்சிக்கிட்டு 25 ஆயிரம் கொடுத்துடுங்க என்று கூறினார். அப்போது **Zonal D.T** திரு.தங்கவேல் அருகில் நின்றிருந்த **V.A.O** திரு.விஜயசேகர் என்னிடம், இவ்வளவு நாள் விட்டுட்டு இப்ப வந்து பட்டா கேக்கறிங்க **DT** சார் சொல்ற மாதிரி பணத்தை எங்களுக்கு கொடுத்துட்டு வேலைய முடிச்சிட்டு போங்க என்று கூறினார். அப்போது **Zonal D.T** திரு.தங்கவேல் சார் என்னிடம் நான் கேட்ட பணத்த எடுத்துக்கிட்டு நாளைக்கு மதியத்துக்கு மேல இங்க ஆபிஸ் வந்து எங்கிட்ட இல்லன்னா **V.A.O** கிட்ட பணத்தை கொடுத்துடுங்க என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும், அப்போதைக்கு இருவரிடமும், சரிங்க சார் பணம் ரெடி பண்ணிட்டு நாளைக்கு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனது தாயார் பெயரில் பட்டா பெறுவதற்கு 25 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட எங்கள் பகுதிக்குறிய **Zonal D.T** திரு.தங்கவேல் மற்றும் **V.A.O** திரு.விஜயசேகர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx 27/12/2023 Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 11.00 Hrs.,on 27.12.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.18/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 12.00 Hrs., on 27.12.2023. Sd.xxx (F.Xavier Rani) 27/12/23 Inspector of Police, V&AC, Trichy.

27/12/23
Insp. of Police
V&AC, Try.